பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
24 12 2024 **TUESDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மருத்துவத் துறையில் தொழில்நுட்ப பயன்பாட்டை மேலும் அதிகரிக்க மருத்துவ மற்றும் பொறியியல் கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. சர்வதேச தீவிரவாத சவால்களை எதிர்கொள்ள நட்பு நாடுகளுடன் உளவுத் தகவல் ஒருங்கிணைப்பு அவசியம் என உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிரபல திரைப்பட இயக்குநர் ஷியாம் பெனகல் மறைவுக்குக் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

4. தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

5. தேசிய சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் மணிப்பூர் அணி பட்டம் வென்றது.

>>>>><<<<<<

மருத்துவத் துறையில் தொழில்நுட்ப பயன்பாட்டை மேலும் அதிகரிக்க மருத்துவ மற்றும் பொறியியல் கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வர்தமான் மஹாவீர் மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், மருத்துவம் என்பது தொழில் அல்ல, சேவை என்று கூறினார்.

மருத்துவத் துறையில் செயற்கை நுண்ணறவு, **MRNA** தொழில்நுட்பம், ரோபோடிக்ஸ் உள்ளிட்டவை வருங்காலத்தில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட துறையின் வல்லுநர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த மத்திய அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இவை, மக்களை முழுமையாக சென்றடையும் வகையில் மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் செயலாற்ற வேண்டும் என்று திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி.நட்டா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

>>>>><<<<<<

சர்வதேச தீவிரவாத சவால்களை எதிர்கொள்ள நட்பு நாடுகளுடன் உளவுத் தகவல் ஒருங்கிணைப்பு அவசியம் என உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், நாட்டில் உள்ள புலனாய்வு அமைப்புகள், கண்காணிப்பு, பாதுகாப்பு, இறையாண்மை, சமூகநலன் ஆகிய நான்கு அம்சங்களை கருத்தில் கொண்டு செயல்படுவதாக தெரிவித்தார்.

இந்த அமைப்புகளின் சிறப்பான செயல்பாடுகள் காரணமாக, கடந்த சில ஆண்டுகளில் தீவிரவாதம், நக்ஸலைட் தாக்குதல்கள், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்கள் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாறி வரும் சூழலுக்கு ஏற்ப, செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல் போன்ற தொழில்நுட்பங்களின் உதவியுடன் கண்காணிப்பையும், பாதுகாப்பையும் வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், நக்ஸலைட் பாதித்த பகுதிகள் ஆகியவற்றில் வன்முறையால் ஏற்படும் உயிரிழப்புகள் 86 சதவீதம் குறைந்துள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

>>>>><<<<<<

வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் 6 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்கிறார்.

இந்த பயணத்தின் போது, அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் பல்வேறு மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து அவர் பேசவுள்ளார்.

தூதரக அதிகாரிகள் பங்கேற்கும் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

>>>>><<<<<<

பிரபல ஹிந்தி திரைப்பட இயக்குநர் ஷியாம் பெனகல் மும்பையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 90.

மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் உள்ளிட்டோரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் ஆவணப் படங்களையும், பல்வேறு வெற்றி திரைப்படங்களையும் அவர் இயக்கியுள்ளார்.

திரைத்துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக, பத்மபூஷன், தாதாசாகிப் பால்கே உள்ளிட்ட உயரிய விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

இந்நிலையில், சிறுநீரக தொற்று மற்றும் வயது முதிர்வு காரணமாக மும்பையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று உயிரிழந்தார்.

அவரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ள குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, ஷியாம் பெனகல் திரைப்படத் துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், ஷியாம் பெனகலின் பணிகள் திரைத்துறையினருக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், வித்தியாசமான கதைக்களங்கள் மூலம் திரைத்துறையில் புரட்சியை ஏற்படுத்தியவர் ஷியாம் பெனகல் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<<

தேசிய நுகர்வோர் உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

1986ஆம் ஆண்டு இதேநாளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் அமலுக்கு வந்ததை நினைவு கூரும் வகையில், ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 24ஆம் தேதி இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

முறையற்ற வணிக நடைமுறைகளையும், சேவை குறைபாடுகளையும் தடுக்கும் நோக்கில் நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி பங்கேற்று பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்கவுள்ளார்.

நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான இ-மேப் என்ற தளத்தையும், செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கூடிய தேசிய உதவி எண்ணையும் திரு. பிரல்ஹாத் ஜோஷி அறிமுகம் செய்யவுள்ளார்.

>>>>><<<<<<

மறைந்த முன்னாள் பிரதமர் பாரத் ரத்னா அடல்பிஹாரி வாஜ்பேயின் 100வது பிறந்த தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, குஜராத் மாநிலம், வாட்நகரில் இன்று நடைபெறும் நல்லாட்சி நடைபயணத்தை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தொடங்கி வைக்கவுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சொந்த ஊரான வாட்நகரில் நடைபெறும் இந்த பயணத்தில்

அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், தன்னார்வ அமைப்பினர் உட்பட 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மை பாரத் தன்னார்வலர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<<

பிஎஸ்என்எல் அதன் சேவைகளை விரிவுபடுத்தி வருவதாக அதன் தலைவரும், மேலாண்மை இயக்குநருமான திரு. ராபர்ட் ஜே ரவி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் நேற்று புதிய சேவைகளை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 5-ஜி சேவை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார்.

(சவுண்ட் பைட் - ரவி 111 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

தமிழகத்தில் சேலம் ரயில்வே கோட்டம், சரக்கு போக்குவரத்தை சிறப்பாக கையாண்டு வருவதாக அதன் மேலாளர் திரு. பூபதி ராஜா தெரிவித்துள்ளார்.

அதிக வருவாய் ஈட்டியதற்காக **Adhivishisht Seva** ரயில்வே புரஸ்கார் விருதை, ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவிடமிருந்து பெற்ற பின்னர், சேலம் திரும்பிய அவர், எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்- பூபதி ராஜா 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<<

29வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து போட்டியில் மணிப்பூர் அணி பட்டம் வென்றது

சத்திஷ்கரின் நாராயன்பூரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மணிப்பூர் அணி, 1-0 என்ற கோல்கணக்கில் ஒடிசா அணியை வீழ்த்தியது.

>>>>><<<<<<

தேசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் ரயில்வேயின் **Sahu Tushar Mane** பட்டம் வென்றார்.

போபாலில் நடைபெற்ற இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்ரைஃபில் பிரிவில் அவர் தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>><<<<<<

புரோ கபடி லீக் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் தில்லி – குஜராத்தையும், புனே – தமிழக அணியையும் வென்றன.

>>>>><<<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் மற்றும் ஜூனியர் பளு தூக்கும் போட்டியில் இந்தியாவின் சாய்ராஜ் நேற்று ஒரு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றார்.

>>>>>**END**<<<<<<